வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 25.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பாஜக தலைமையிலான அரசு இரவும், பகலும் கடுமையாக உழைத்து, அர்ப்பணிப்புடன் செயல்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரி தேங்காய்திட்டு பகுதியில் நடைபெற்ற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தினை முதலமைச்சர் திரு ரங்கசாமி திறந்து வைத்தார்.
- கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி, புதுச்சேரியில் உள்ள தேவாலயங்களில நள்ளிரவு சிறப்பு பிராத்தனை நடைபெற்றது.
- முன்னாள் பாரத பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் 100 ஆவது பிறந்த நாள் புதுச்சேரி அரசு சார்பில் கொண்டாடப்பட்டது.

<u>*மோடி கஜுராஹோ* (16)</u>

பாஜக தலைமையிலான அரசு எப்போதும் நல்லாட்சிக்காக இரவும், பகலும் கடுமையாக உழைத்து, அர்ப்பணிப்புடன் செயல்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார். முன்னாள் பாரத பிரதமர், பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாயின் 100 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மத்திய பிரதேச மாநிலம் கஜுராஹோவில் நடைபெற்ற விழாவில், கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். நாட்டின் முதல் நதிகளை இணைக்கும் திட்டமான கென்-பெட்வா நதிகள் இணைப்பு திட்டத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி அடிக்கல் நாட்டி, ஓம்காரேஸ்வரர் மிதக்கும் சூரிய ஆலையையும் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியின் போது, மறைந்த முன்னாள் பாரத பிரதமர் வாஜ்பாயின் நினைவாக தபால் தலை மற்றும் நாணயத்தையும் பிரதமர் வெளியிட்டார். தொடர்ந்து, உள்ளூர் அளவில் நல்லாட்சி வழங்கும் நோக்கில் கிராம பஞ்சாயத்துக்களுக்கான ஆயிரத்து 153 அட்டல் கிராம கட்டடங்களில் கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் மத்திய பிரதேச ஆளுநர் திரு மங்குபாய் பட்டேல், முதலமைச்சர் டாக்டர் மோகன் யாதவ், மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*<u>வாஜ்பாய்-மோடி</u>* <u>(10)</u>

முன்னாள் பாரத பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் மற்றும் பண்டிட் மதன் மோகன் மாளவியா- ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களுக்கு புகழாரம் சூட்டியுள்ளார். இதுகுறித்து பிரதமர் தமது சமூக வலைதள பதிவில், வலிமையான, வளமான மற்றும் தன்னம்பிக்கை கொண்ட இந்தியாவை கட்டி எழுப்புவதில் வாஜ்பாய் தனது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளதை நினைவு கூர்ந்தார். இதனை தொடர்ந்து, தீவிர சுதந்திர போராட்ட வீரரான பண்டிட் மதன் மோகன் மாளவியா தமது வாழ்நாள் முழுவதும் கல்வியின் முன்னோடியாக இருந்ததாகவும், நாட்டிற்காக அவர் ஆற்றிய ஒப்பற்ற பங்களிப்பு எப்போதும் உத்வேகம் அளிக்கும் என தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முருகன் (8)

ஜார்கண்ட் மாநிலத்திற்கு மாநிலத்திற்கு அரசு முறை பயணமாக சென்றுள்ள மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் பலாமுவில் உள்ள ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் நிலையங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டார். அப்போது, நேரலையில் நேயர்களுடன் தமது கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டார். பின்னர் பேசிய அவர், ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் மூலம் மக்களுக்கு தேவையான சிறந்த திட்டங்களை வழங்க பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார்.

மன்-கீ- பாத் (7)

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடம் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் 117 ஆவது மன்-கீ- பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 29 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகாஷ்வாணியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சிக்கு மக்கள் தங்கள் ஆலோசனைகளையும், எண்ணங்களையும் வரும் 27 ஆம் தேதி வரை, My gov, மற்றும் Namo செயலி மூலமாகவோ அல்லது 1800-117800 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவோ தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பால புரஸ்கார் (13)

குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு நாளை புதுடெல்லியில் 14 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 10 சிறுமிகள் உட்பட 17 குழந்தைகளுக்கு ராஷ்டிரிய பால புரஸ்கார் விருதை வழங்க உள்ளார். கலை கலாச்சாரம், துணிச்சல், சமூகசேவை உள்ளிட்ட 7 பிரிவுகளில் சாதனை புரிந்த குழந்தைகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. இதேபோல், நாளை காலை 10.30 மணி அளவில்

கம்பன் கலை அரங்கில் வீர்-பால் திவஸ், புதுச்சேரி யூனியன் பிரதேச குழந்தைகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை சார்பில் கொண்டாடப்பட உள்ளதாக அத்துறையின் இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி உள்ளிட்டோர் கலந்து கொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*முதலமைச்சர் பால்* (13)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா நாடு முழுவதும் தேசிய அளவிலான 10 ஆயிரம் கூட்டுறவு கடன் சங்கம், பால் மற்றும் மீன் வள கூட்டுறவு சங்கங்களை துவக்கி வைத்து, அதற்கான சான்றிதழ்களை காணொளி காட்சி மூலம் வழங்கினார். இதன் தொடர்ச்சியாக புதுச்சேரி தேங்காய்திட்டு பகுதியில் நடைபெற்ற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் திறப்பு விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் கூட்டுறவுத் துறையின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். மேலும் அவர் கூறுகையில்..........

அரியாங்குப்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், கூட்டுறவுத் துறை செயலர் திரு நெடுஞ்செழியன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு யஷ்வந்தையா உள்ளிட்ட கூட்டுறவுத் துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கிறிஸ்துமஸ் (14)

இயேசு கிறிஸ்து பிறப்பை குறிக்கும் கிறிஸ்துமஸ் பண்டிகை உலகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. புதுச்சேரியிலும் கிறிஸ்துமஸ் பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. புதுச்சேரியில் உள்ள அனைத்து தேவாலங்களிலும் நடைபெற்ற நள்ளிரவு சிறப்பு பிராத்தனையில் ஏராளமான கிறிஸ்துவர்கள் கலந்து கொண்டனர். மிஷன் வீதியில் உள்ள நூற்றாண்டு பழமை வாய்ந்த ஜென்மராகினி அன்னை பேராலயத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி புதுச்சேரி மற்றும் கடலூர் உயர் மறை மாவட்ட பேராயர் பிரான்சிஸ் கலிஸ்ட் தலைமையில் சிறப்பு திருப்பலி நடைபெற்றது. இதனை தொடர்ந்து, பேராயர் குழந்தை இயேசு சொருபத்தை ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த குடிலில் வைத்தார். இதேபோல், ரயில் நிலையம் அருகே உள்ள தூய இருதய ஆண்டவர் பசிலிக்கா, கடற்கரை சாலையில் உள்ள கப்ஸ் தேவாலயம், தட்டாஞ்சாவடி பாத்திமா அன்னை ஆலயம், உள்ளிட்ட பல்வேறு தேவாலயங்களில் சிறப்பு பிராத்தனை நடைபெற்றது.

வாஜ்பாய்-புதுச்சேரி (10)

முன்னாள் பாரத பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் 100 ஆவது பிறந்த நாளை ஒட்டி, புதுச்சேரி அரசு சார்பில் கடற்கரை சாலையில் உள்ள மேரி கட்டிட வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திரு உருவ படத்திற்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன், திரு சாய் ஜே சரவணன்குமார், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, அரசுகொறடா திரு ஏ.கே.டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கல்யாணசுந்தரம், திரு கே.எஸ்.பி ரமேஷ், திரு பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு அசோக்பாபு ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

<u>ஆளுநர் நியமனம்</u> (5)

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, மிசோரம், கேரளா உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்களை நியமித்து உத்தரவிட்டுள்ளார். பீகார் மாநில ஆளுநராக இருந்த திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் கேரள மாநில ஆளுநராகவும், முன்னாள் மத்திய உள்துறை செயலர் திரு. அஜய்குமார் பல்லா மணிப்பூர் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

<u>நமச்சிவாயம்</u> (10)

புதுச்சேரியில் ஜனவரி மாதம் 1 ஆம் தேதி முதல் கட்டாய ஹெல்மெட் சட்டத்தில் அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை என உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் கூறியுள்ளார். அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், மத்திய அரசின் புதிய கல்வி முறை, சிறந்த மாணவர்களை உருவாக்கும் என்றும், அரசு பள்ளி மாணவர்களின் கல்வித் தரம் உயரும் என தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், ஹெல்மெட் அணிய வேண்டும் என்பது உச்ச நீதிமன்ற உத்தரவு என்றும், இதையேதான் காவல் துறையினரும் வலியுறுத்தி வருகின்றனர் என குறிப்பிட்டார். இருப்பினும், மக்கள் நலன் கருதி இது குறித்து ஆலோசித்து விரைவில் முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார்.